# தொழும்போது பெண்கள் தமது கால்களை மறைக்க வேண்டுமா?

حَدَّثَنَا الْقَعْنَبِيُّ، عَنْ مَالِكٍ، عَنْ مُحَمَّدِ بْنِ زَيْدِ بْنِ قُنْفُذٍ، عَنْ أُمِّهِ، أَنَّهَا سَأَلَتْ أُمَّ سَلَمَةَ مَاذَا تُصَلِّي فِيهِ الْمَرْأَةُ مِنَ الثِّيَابِ فَقَالَتْ: «تُصَلِّي فِي الْخِمَارِ وَالدِّرْعِ السَّابِغِ الَّذِي يُغَيِّبُ ظُهُورَ قَدَمَيْهَا» (سنن أبي داود:639)

இது சம்பந்தமாக அபூதாவுதில் 639 மற்றும் 640 இலக்கங்களில் பதிவாகியுள்ளது. 639வது இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸ் மவ்கூபாகவும், 640வது இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸ் மர்பூ.ஃவாகவும் காணப்படுகின்றது. அதாவது மவ்கூப் என்பது நபி ﷺ அவர்கள் வரை சென்றடையாததாகும். மர்பூ.ஃ என்பது நபி ﷺ அவர்கள் வரை சென்றடைந்ததாகும்.

640ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மர்பூ.ஃவாக வந்துள்ள ஹதீஸில் இரண்டு குறைபாடுகள் காணப்படுகின்றன. முதலாவது குறை என்னவென்றால், இதில் உம்மு ஹராம் என்ற ஒரு பெண்மணி இடம்பெறுகின்றார். இவர் மஜ்ஹூல் - அறியப்படாதவராவார். முழு ஹதீஸ் கிரந்தங்களிலும் இந்த ஒரேயொரு ஹதீஸை மட்டுமே இவர் அறிவித்துள்ளார். இவர் ஒருவரிடமிருந்து மாத்திரமே இதனைக் கேட்டுள்ளார். அதாவது இந்தப் பெண்மணியும் உம்மு ஸலமாவிடம் மட்டுமே கேட்டுள்ளதாக வருகின்றது. அதேபோன்று இவரிடமிருந்தும் ஒரேயொருவர் மாத்திரமே கேட்டுள்ளார். அதாவது இவருடைய மகன் கேட்டுள்ளார். இப்படி ஒருவர் மாத்திரமே இவரிடமிருந்து கேட்பதானது மஜ்ஹூலாகும். அத்துடன் இந்த உம்மு ஹராம் என்ற பெண்மணியுடைய நிலைமை (தராதரம்) என்னவென்று தெரியாது உள்ளது. இதன் மூலமும் இவர் மஜ்ஹூலாகின்றார். இது முதலாவதும் முக்கியமான குறையுமாகும்.

இரண்டாவது குறை என்னவென்றால், இந்த 640ம் இலக்க ஹதீஸ் மாத்திரமே நபி ﷺ அவர்கள் வரை சென்றடையக் கூடியதாக மர்பூ.ஃவான ஹதீஸாக இருக்கின்றது. மற்றைய அனைத்து அறிவிப்புக்களும் உம்மு ஸலமா அவர்களுடன் முடிவடைகின்றது. அதாவது அப்துர் ரஹ்மான் இப்னு அப்தில்லாஹ் ய.ஃனிப்னு தீனார் என்பவர் மாத்திரமே நபி ﷺ அவர்கள் வரை சென்றடையக் கூடியதாக 640ம் இலக்க ஹதீஸை அறிவிக்கின்றார். இவர் நம்பகமானவராக இருந்தாலும் மனன சக்தியில் குறைபாடு உள்ளவர் என்று இவரைப் பற்றி குறை கூறப்படுகின்றது. இவர் இந்த ஹதீஸை முஹம்மது இப்னு ஸைத் என்பவரிடமிருந்து அறிவிக்கின்றார். இதே முஹம்மது இப்னு ஸைத்திடமிருந்து மாலிக் இப்னு அனஸ், பக்ர் இப்னு முளர், ஹப்ஸ் இப்னு ரியால், இஸ்மாயில் இப்னு ஜ.ஃபர.ஃ, இப்னு அபீ ஸைத், இப்னு இஸ்ஹாக் போன்றவர்கள் இதே விடயத்தை அறிவிக்கின்றனர். ஆனால் இவர்கள் அறிவிக்கக் கூடிய அனைத்து அறிவிப்புக்களும் உம்மு ஸலமா வரைக்கும் மட்டுமே செல்கின்றது. இந்த மனன சக்தியில் குறைபாடுள்ள அப்துர் ரஹ்மான் இப்னு அப்தில்லாஹ் ய.ஃனிப்னு தீனார் என்பவர் மாத்திரமே நபி ﷺ அவர்கள் வரை சென்றடையக் கூடியதாக மர்பூ.ஃவாக அறிவிக்கின்றார்.

எனவே இந்த 640ம் இலக்கத்தில் மர்பூ.ஃவாக வரக்கூடிய அறிவிப்பில் இரண்டு சிக்கல்கள் இருக்கின்றன.

01. உம்மு ஹராம் என்பவர் மஜ்ஹூலாக இருக்கின்றார்.
02. மனன சக்தியில் குறைபாடுள்ள அப்துர் ரஹ்மான் இப்னு அப்தில்லாஹ் ய.ஃனிப்னு தீனார் என்பவர் மாத்திரமே மர்பூ.ஃவாக அறிவிக்கின்றார்.

இதேபோன்று மவ்கூபாக வரக்கூடிய அறிவிப்புக்களிலும் இதே அறிவிப்பாளர்களே இடம் பெற்றிருப்பதால், இந்த மவ்கூபான அறிவிப்பும் பலயீனமானதாகும்.

ஹாகிமிலும் இந்த ஹதீஸ் பதியப்பட்டிருக்கின்றது. இதில் உம்மு ஹராமைப் பற்றி எதுவும் கூறாமல் இமாம் ஹாகிம் இதனை ஸஹீஹ் என்கின்றார்.

எனவே மர்பூ.்., மற்றும் மவ்கூப் ஆகிய அனைத்து அறிவிப்புக்களிலும் மஜ்ஹூலான இந்த உம்மு ஹராம் என்ற பெண்மணி இடம்பெறுவதால் இது சம்பந்தமாக வரக்கூடிய அனைத்தும் பலயீனமானதாகும்.

எனவே ஒரு பெண் தன்னை முழுமையாக மறைத்துக் கொள்ள வேண்டிய இடங்கள் தவிர்ந்த மற்றைய இடங்களில் தனது காலை மறைத்துக் கொண்டு தொழ வேண்டிய அவசியமில்லை.